( முழுப் பதிப்புரிமையுடையது ) ( All Rights Reserved )

**மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2023**

**தரம் ஐந்து மாணவர்களுக்கான**


# முன்னோடிப் பரீட்சை - இல-09

# வினாத்தாள் - I




சுட்டெண்:- ..........................................

நேரம் :- 1 மணித்தியாலம்

- **பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.**
  - உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
  - மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.

(01) 

அருகே தரப்பட்டுள்ள உருவின் வெற்றிடத்திற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.

(1)  (2)  (3) 

(02) பின்வரும் புதிரில் உள்ள சொல்லைக் கண்டுபிடித்து தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்க.

* முதலெழுத்து தங்கையில் உண்டு. மங்கையில் இல்லை.
* இரண்டாம் எழுத்து மரத்தில் உண்டு. மடத்தில் இல்லை.
* மூன்றாம் எழுத்து கம்பியில் உண்டு. கப்பியில் இல்லை.

(1) தரம் (2) தம்பி (3) மயில்

(03) உருவில் உள்ள பொருட்களுடன் தொடர்புபட்ட செயல்கள் முறையே இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.



(1) சுழலுதல், அரைத்தல், வெட்டுதல். (2) அரைத்தல், சுழலுதல், அறைதல். (3) வடிக்கட்டுதல், இழுத்தல், ஏறுதல்.

(04) பின்வரும் பாடல் வரிகளை ஒழுங்குபடுத்தினால் கிடைக்கும் சரியான எழுத்துக் கூட்டங்களை தெரிவு செய்க.

A - வளரும் செடிகள் நிச்சயம்
B - மலர்கள் உண்டு நிச்சயம்
C - வண்ணச் சோலை தன்னிலே
D - வளரும் செடிகள் மீதிலே


(1) D, A, C, B
(2) B, A, D, C
(3) C, A, D, B

(05) தெற்குத் திசையைப் பார்த்து நிற்கும் பைசர் வலஞ்சுழியாக $\frac{3}{4}$ சுற்று சுழன்று நின்றான். அதன்படி, அவன் தற்போது எந்த திசையைப் பார்த்து நின்றுகொண்டிருக்கிறான்.

(1) வடக்குத் திசை (2) கிழக்குத் திசை (3) மேற்குத் திசை

(06) நீளம் 9cm உம், அகலம் 5cm உம் கொண்ட கார்ட்போர்ட் அட்டையிலிருந்து நீளம் 5cm உம், அகலம் 3cm உம் கொண்ட கார்ட்போர்ட் அட்டைத் துண்டொன்று வெட்டி நீக்கப்பட்டது. அதன்படி, மீதமுள்ள கார்ட்போர்ட் அட்டையின் நீளம் மற்றும் அகலம்,

(1) நீளம் 6cm, அகலம் 5cm (2) நீளம் 5cm, அகலம் 4cm (3) நீளம் 9cm, அகலம் 5cm

(07) 


அருகில் தரப்பட்டுள்ள உருவில் பெரிய பற்சில்லு அம்புக்குறி காட்டும் திசையில் சுழலும்போது,

(1) A, B ஆகிய வாளிகள் மேல் நோக்கிச் செல்லும்.
(2) A வாளி மேல் நோக்கிச் செல்லும், B வாளி கீழ் நோக்கிச் செல்லும்.
(3) A வாளி கீழ் நோக்கிச் செல்லும், B வாளி மேல் நோக்கிச் செல்லும்.

(08) A எனும் நாட்டில் பி.ப. 2.00 மணியாக இருக்கும்போது B எனும் நாட்டில் மு.ப 10.00 மணியாகும். அதன்படி, B எனும் நாட்டில் பி.ப 2.00 மணியாக இருக்கும்போது A எனும் நாட்டின் நேரம்,

(1) பி.ப 10.00 (2) பி.ப [illegible] (3) பி.ப 6.00

kalvi.lk


சிவாவிடம் ஒரு ரூபாய் நாணயக் குற்றிகளும், இரண்டு ரூபாய் நாணயக் குற்றிகளும் சமனான எண்ணிக்கையில் உள்ளன. அவனிடமுள்ள நாணயக் குற்றிகளின் மொத்தப் பெறுமதி ரூபாய் 30.00 ஆகும். அதன்படி, அவனிடமுள்ள மொத்த நாணயக் குற்றிகளின் எண்ணிக்கை,




(1) 20 (2) 18 (3) 12

ஒரு குறிப்பிட்ட பெரிய சதுரமுகியொன்று ஒரேயளவான சிறிய சதுரமுகிகளை ஒன்றுடன் ஒன்று ஒட்டியதன் மூலம் அமைக்கப்பட்டுள்ளது. இப்பெரிய சதுரமுகியை எந்த முகத்திசையில் பார்த்தாலும் ஒரேயளவான 9 சிறிய சதுர வடிவங்கள் காணக்கிடைக்கும். அதன்படி, பெரிய சதுரமுகியிலுள்ள சிறிய சதுரமுகிகளின் எண்ணிக்கை,




(1) 18 (2) 27 (3) 36


முதலில் தரப்பட்டுள்ள உருவை வேறொரு திசையினூடாகப் பார்த்தால் புலப்படும் முறை,



(1)  (2)  (3) 

கீழே A, B, C ஆகிய உருக்களில் காட்டப்பட்டுள்ள பாத்திரங்கள் குழாய்களினால் தொடர்புபடுத்தப்பட்டுள்ளன. அவற்றின் நீர்மட்டங்கள் வரையப்பட்டுள்ள முறைகளின்படி, பிழையாக வரையப்பட்டுள்ள உருவைத் தெரிவு செய்க.

(1)  (2)  (3) 




இத்தராசு சமநிலையடைவதற்காக B பக்கத்திற்கு இடவேண்டிய நிறை 500g ஆகும். அதன்படி, அன்னாசிப்பழத்தின் நிறை,

(1) 1kg (2) 1kg 250g (3) 750g


பிள்ளையொன்று வீட்டிலிருந்து பாடசாலைக்குச் செல்லும்போது ஒழுங்குமுறையாக தென்கிழக்கு, வடகிழக்கு, வடமேற்கு ஆகிய திசைகளுக்குப் பயணித்தது. அதன்படி, அப்பிள்ளை பாடசாலையிலிருந்து வீட்டுக்கு வரும்போது பயணிக்கும் திசைகளை ஒழுங்குமுறையாக எழுதினால் கிடைப்பது,


(1) தென்கிழக்கு - தென்மேற்கு - வடமேற்கு (2) வடகிழக்கு - வடமேற்கு - தென்மேற்கு
(3) தென்மேற்கு - வடகிழக்கு - தென்கிழக்கு

Education கல்வி

பின்வரும் குறியீடுகளுக்கு ஒவ்வொரு பெறுமதி வழங்கப்பட்டுள்ளது. அக்குறியீடுகளின் பெறுமதிகள் ஒழுங்குமுறைப்படி எழுதப்படவில்லை. எனின், 5921 எனும் எண்ணை குறியீடுகளினால் எழுதினால் கிடைப்பது,


 = 9175  = 5929

(1)  (2)  (3) 




இவ்வுருவில் காட்டப்படும் கடதாசிக் கீலத்தை விரித்தபோது அக்கடதாசிக் கீலத்தின் நீளம்,

(1) 9cm (2) 11cm (3) 10cm




இந்த திண்மம் புள்ளிக்கோடுகளின் வழியே இரு சம துண்டுகளாக வெட்டப்பட்டது. அதன்படி, வெட்டப்பட்ட ஒரு துண்டில் உள்ள முகங்களின் எண்ணிக்கை,

(1) 9 (2) 7 (3) 8

'கானல் நீரின் பின்னே ஓடும் மான்கள்போல" என்பதன் கருத்து,

(1) பிரதிபலன் ஒன்றைப் பெற்றுக்கொள்ள முடியாத முயற்சியில் ஈடுபடல் என்பதாகும்.
(2) சுறுசுறுப்பாகச் செயற்படுவதன் மூலம் காலத்தை மீதப்படுத்தலாம் என்பதாகும்.
(3) நன்றாகப் பயிற்சிப் பெற்றால் போட்டியில் வெற்றிப் பெறலாம் என்பதாகும்.





பிள்ளையொன்று B பாத்திரத்தைப் பூரணமாக நிரப்பி பல தடவைகள் A பாத்திரத்திற்கு நீர் ஊற்றியது. அதன்படி, A பாத்திரம் பூரணமாக நிரம்பிய சந்தர்ப்பத்தில் B பாத்திரத்தில் மீதியாக இருந்த நீரின் அளவு,

(1) 400ml (2) 200ml (3) 300ml


kalvi.lk

சுட்டெண்:.......................................

(20) 


இங்கு காட்டப்பட்டுள்ள A, B, C, D, E எனும் புள்ளிகளை கோடுகளின் மூலம் தொடர்புபடுத்தினால் வரையக்கூடிய மிகக் குறைந்த கோடுகளின் எண்ணிக்கை,



(1) 10 (2) 9 (3) 11

(21) 




இந்த திண்மங்களை அம்புக்குறி காட்டும் திசையினூடாகப் பார்த்தால் புலப்படும் முறை,

(1)  (2)  (3) 

(22) மழை பெய்யும் சந்தர்ப்பமொன்றின்போது மைதானமொன்றின் நடுவே இரு பாத்திரங்கள் வைக்கப்பட்டன. அதன்படி, ஒரே உயரத்திற்கு நீர் நிரம்பும் இரு பாத்திரங்களையும் தெரிவு செய்க.

(1)  (2)  (3) 

(23) செங்கோணத்திற்குச் சமனான கோணம், செங்கோணத்தை விடப் பெரிய கோணம், செங்கோணத்தை விடச் சிறிய கோணம் எனும் மூன்று வகைக் கோணங்களும் அமைந்துள்ள உருவைத் தெரிவு செய்க.

(1)  (2)  (3) 

(24) எல்லா பிள்ளைகளும் விளையாடுவதற்கு விரும்புகிறார்கள். சில பிள்ளைகள் மருந்து குடிப்பதற்கு விரும்புவதில்லை. அதன்படி, பின்வரும் கூற்றுக்களுள் பிழையான கூற்றைத் தெரிவு செய்க.

(1) “கிருபா” ஒரு பிள்ளை ஆகும். கிருபா மருந்து குடிப்பதற்கு விருப்பமானவள். விளையாடுவதற்கு விருப்பமானவள்.

(2) “பாலா” ஒரு பிள்ளை ஆகும். பாலா மருந்து குடிப்பதற்கு விரும்புவதில்லை. அவன் விளையாடுவதற்கு விரும்புவதில்லை.

(3) “அமீன்” ஒரு பிள்ளை ஆகும். அமீன் மருந்து குடிப்பதற்கு விரும்புவதில்லை. அவன் விளையாடுவதற்கு விருப்பமானவன்.


(25) நிஸாம் பாடசாலையின் விவாதக் குழு தலைவர் ஆவான். நிஸாம் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் 188 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தான். அவன் கடந்த ஆண்டு பாடசாலையின் 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் முதலிடம் பெற்றார். அதன்படி, அவன்,


(1) புத்திசாலி (2) முயற்சியுடையவன் (3) திறமைசாலி

(26) 

இவ்வுருவில் காட்டப்படும் வடிவத்தைப் பெற்றுக்கொள்வதற்காக செவ்வக வடிவான கடதாசியொன்றை நான்காக மடித்து வெட்ட வேண்டிய முறையைத் தெரிவு செய்க.


(1) 


(2) 


(3) 


(27) பெட்டியொன்றில் மூன்று வெள்ளை நிறப் பந்துகளும் மூன்று நீல நிறப் பந்துகளும் உள்ளன. பிள்ளையொன்று இரண்டு கண்களையும் மூடிக்கொண்டு ஒரு தடவையில் இரண்டு பந்துகள் வீதம் வெளியே எடுத்தது. அதன்படி, அப்பிள்ளைக்கு கட்டாயமாக இரண்டு வர்ணங்களிலும் இரண்டு பந்துகள் கிடைப்பது,

(1) முதலாவது தடவையிலாகும். (2) இரண்டாவது தடவையிலாகும். (3) மூன்றாவது தடவையிலாகும்.

(28) 

இவ்வுருவில் காணக்கிடைக்கும் செங்கோணத்தைக் கொண்டுள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை,

(1) 6 (2) 4 (3) 5


(29) திவ்யா ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை பாடசாலைக்கு உணவு கொண்டு செல்லும் ஒழுங்குமுறை பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி |
|---|---|---|---|---|
| பாண் | இடியப்பம் | கௌபி | சோறு | கடலை |

அதன்படி, அவள் 18 ஆம் திகதி பாடசாலைக்கு இடியப்பத்தைக் கொண்டு சென்றாள் எனின், அவள் 27 ஆம் திகதி பாடசாலைக்கு கொண்டு செல்ல வேண்டிய உணவு வகை,


(1) சோறு (2) கடலை (3) கௌபி

kalvi.lk

(30) 


பிள்ளையொன்று உருவில் காட்டியுள்ள முறைப்படி, முற்றத்தில் A, B, C, D எனும் செவ்வகமொன்றை வரைந்து, அம்புக்குறிகளினால் காட்டியுள்ள திசைகளின் ஊடாக A இலிருந்து C வரை பயணித்தது. அப்பிள்ளை பயணம் செய்த மொத்த தூரம் 14m ஆகும். அதன்படி, செவ்வகத்தின் அகலம்,

(1) 4m (2) 6m (3) 5m



(31) 

இவ்வுருவில் மிகக் குறைவாக காணக்கிடைப்பது,

(1) சதுரங்கள் (2) செவ்வகங்கள் (3) முக்கோணங்கள்

(32) வெற்றிடத்திற்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.

 =  எனின்,  = ........................

(1)  (2)  (3) 

(33) ஒரு பிள்ளையிடம் 6 மஞ்சள் நிறப் பூக்களும், 8 சிவப்பு நிறப் பூக்களும், 19 வெள்ளை நிறம் அல்லாத பூக்களும் உள்ளன. அதன்படி, அப்பிள்ளையிடம் இருக்கக்கூடிய மிகக் குறைந்த பூக்களின் எண்ணிக்கை,

(1) 14 (2) 33 (3) 19

(34) மார்ச் மாதத்தில் இருக்கக்கூடிய சனிக்கிழமைகளின் திகதிகளின் மிகக் குறைந்த கூட்டுத்தொகை,

(1) 75 (2) 58 (3) 55

(35) கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களில் தனிப்பட்ட கருத்தாக அமைந்துள்ள கூற்றைத் தெரிவு செய்க.

(1) அசுத்தமான நீரைக் குடிப்பதைத் தவிர்க்க வேண்டும். (2) கப்பல் என்பது நீரில் பயணிக்கும் வாகனம் ஆகும்.

(3) பூ வகைகளில் மிக அழகான பூ ரோஜா ஆகும்.

(36) மோகனின் வயது 35 வயதை விடக் குறைவாகும். டில்சானின் வயது 20 இற்கும் 30 இற்கும் இடைப்பட்டதாகும். இக்பாலின் வயது 5 ஐ விடக் கூடியதாகும். அதன்படி, இந்த மூவரில் மிகக் குறைந்த வயதாக இருக்கக்கூடியது?

(1) மோகனுக்கு (2) டில்சானுக்கு (3) இக்பாலுக்கு


(37) அனைத்துப் பக்கங்களும் இலக்கமிடப்பட்ட புத்தகத்தின் அடுத்தடுத்த இரு பக்கங்களின் இலக்கங்களின் கூட்டுத்தொகையாக இருக்கக்கூடியது,

(1) 46 (2) 53 (3) 82

(38) பேருந்து ஒன்றில் பயணிகள் 32 பேர் இருந்தனர். முதலாவது பேருந்துத் தரிப்பிடத்தில் பேருந்திலிருந்து 9 பயணிகள் இறங்கி 7 பயணிகள் ஏறினார்கள். இரண்டாவது பேருந்துத் தரிப்பிடத்தில் பேருந்திலிருந்து 4 பயணிகள் இறங்கி 11 பயணிகள் ஏறினார்கள். அதன்படி, தற்போது பேருந்தில் பயணம் செய்யும் பயணிகளின் எண்ணிக்கை,


(1) 37 (2) 34 (3) 39

(39) கீழேயுள்ள உருவில் காட்டப்பட்டுள்ள விபரங்களை நன்றாக அவதானிக்குக.




மேலேயுள்ள உருவிற்கேற்ப, சியானாவின் தந்தை நஸீர் ஆகும். அதன்படி, நஸீர் பரானாவின்,

(1) தந்தை (2) மகன் (3) சகோதரன்

(40) 


மேலேயுள்ள வரைபு ஒரு வகுப்பில் விளையாடும் பிள்ளைகளின் எண்ணிக்கையும், விளையாடாத பிள்ளைகளின் எண்ணிக்கையும் பற்றிய தகவல்களைக் காட்டுகிறது. அந்த வகுப்பிலுள்ள ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கை 11 எனின், அந்த வகுப்பிலுள்ள பெண் பிள்ளைகளின் எண்ணிக்கை,

(1) 8 (2) 9 (3) 7

kalvi.lk

( முழுப் பதிப்புரிமையுடையது ) ( All Rights Reserved )

**மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2023**

**தரம் ஐந்து மாணவர்களுக்கான**

# முன்னோடிப் பரீட்சை - இல-09

# வினாத்தாள் - II

சுட்டெண் :- ..............................................................

நேரம் :- 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

- **பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.**
  - * உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
  - * மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.

**(01) பின்வரும் பாடலை வாசித்து, வினவப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.**

கூடு காற்றில் ஆடி இந்தக்
குஞ்சு விழுந்து விட்டதே
தேடித் தாயும் தூக்க முன்னர்
செத்துப் போகத் துடிக்குதே

கட்டெறும்பும் ஊருதே
காகம் கொத்தப் பார்க்குதே
வட்டம் போட்டு பருந்து இந்த
மரத்தை நோக்கி வருகுதே

மரத்தில் ஏறிக் கூட்டிலே
வைத்து விடுங்கள் குஞ்சையும்
இரக்கம் ஆக இருக்குதையோ
இளைத்துக் கிடந்து துடிக்குதே

(i) இப்பாடலுக்குப் பொருத்தமான தலையங்கம் ஒன்றை எழுதுக. ..............................

(ii) கூடு எங்கே இருந்தது? ..............................


(iii) கூடு ஆடக் காரணம் என்ன? ..............................

(iv) குஞ்சை நாடி வந்த பறவைகள் எவை? ..............................

(v) "வளி" என்பதன் ஒத்தகருத்துச் சொல் எது? ..............................

(vi) "துடிக்குதே" என்னும் சொல் உணர்த்தும் காலம் யாது? ..............................

**(02) பின்வரும் புதிரைப் பூரணப்படுத்துக.**



*** இடமிருந்து வலம்**

(1) நான்கு சிறகுகளைக் கொண்ட பூச்சி.

(2) புரதம் அடங்கிய தானிய வகைகளில் ஒன்று.

*** மேலிருந்து கீழ்**

(1) "இன்ப........" இந்த இணைமொழியின் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்.

(3) "இறப்பு" என்பதன் எதிர்க்கருத்துச் சொல்.

**(03) கீழே தரப்பட்டுள்ள தொடரைப் பூரணப்படுத்துக.**

எறும்பு கூட்டம் என்பதுபோல மயில் ..............................

**(04) பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.**

(i) அயற்சூழல் :- .............................. (ii) நூற்றாண்டு :- ..............................

**(05) அடைப்பினுள் உள்ள சொற்களை மாத்திரம் பயன்படுத்தி சரியான கருத்துள்ள இரு வாக்கியங்கள் அமைக்குக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் நான்கு சொற்களாவது இடம்பெற வேண்டும்.)**

| | | | |
|---|---|---|---|
| நல்ல | பழங்களை | ஆழமாக | படிப்பர் |
| அணில் | வயலை | நன்றாகப் | உண்டது |
| உழவர்கள் | பிள்ளைகள் | கொறித்து | உழுதனர் |

(i) ..............................
..............................

(ii) ..............................

**(06) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு சொல்லிலும் உள்ள உயிர்க்குறிகளின் பெயர்களை புள்ளிக்கோட்டில் எழுதுக.**

(i) சோதனை :- .............................. (ii) வெற்றி :- ..............................

**(07) பின்வரும் பழமொழியின் கருத்தை எழுதுக.**

ஆத்திரக்காரனுக்குப் புத்தி மத்திமம் :- ..............................

**(08) பிராணிகளுக்கான ஆண், பெண் மரபுப் பெயர்களைக் கொண்டு அட்டவணையைப் பூரணப்படுத்துக.**

| | பொதுப்பெயர் | ஆண் | பெண் |
|---|---|---|---|
| i. | குரங்கு | .................... | .................... |
| ii. | யானை | .................... | .................... |

kalvi.lk

**(09) பொருத்தமான இடங்களில் நிறுத்தக்குறிகளை இடுக.**

உங்களுக்கு 100 மீற்றர் 200 மீற்றர் ஆகிய போட்டிகளில் வெற்றி உண்டாகுக

**(10) ஒவ்வொரு தமிழ்ச் சொல்லிற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கிலத்தில் எழுதுக.**

(i) நதி :- ........................................................... (ii) இரவு :- ...........................................................

**(11) பின்வரும் வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்திற்கு மாற்றி ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.**

என்னால் பறக்க முடியும் :- ...........................................................

**(12) பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்துக்களைத் தமிழில் எழுதுக.**

(i) I am sorry :- ........................................................... (ii) Happy new year :- ...........................................................

(iii) Good morning :- ...........................................................

**(13) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தினைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.**


கை கழுவுங்கள் :- ...........................................................

**(14) பின்வரும் சிங்கள வாக்கியத்தின் கருத்தைத் தமிழில் எழுதுக.**

சமன் கொஹேத? :- ...........................................................

(15) தரப்பட்டுள்ள எண்ணுக்கு முந்திய எண்ணை எழுத்தில் எழுதுக.

70100 :- ...........................................................

(16) 


இவ்விரண்டு எண்சட்டங்களும் காட்டும் எண்களின் கூட்டுத்தொகையை எழுத்தில் எழுதுக. ...........................................................

(17) 



இக்கடிகார முகத்தில் ஒரு நாளின் பிற்பகல் நேரம் காட்டப்பட்டுள்ளது. இந்நேரத்திற்கு ஒரு மணித்தியாலத்திற்கு பின்னரான நேரத்தை 24 மணித்தியாலக் கடிகார நேரத்தில் எழுதுக. ..............................

(18) பிள்ளையொன்று பிரதான வீதியில் வடகிழக்குத் திசைக்குப் பயணிக்கும்போது பிரதான நாற்சந்தியில் பிள்ளையின் வலதுக் கைப்பக்கத்திலிருந்து பேருந்து ஒன்று வருவதைக் கண்டது. அதன்படி, பேருந்து பயணித்த திசை யாது? ..............

(19) மாம்பழம் ஒன்றின் விலை ரூபாய் 30.00 ஆகும். என்னிடம் உள்ள பணம் ரூபாய் 200.00 ஆகும். அதன்படி,


(i) அப்பணத்திற்கு வாங்கிக்கொள்ளக்கூடிய மிகக் கூடிய மாம்பழங்களின் எண்ணிக்கை யாது? ..............................

(ii) மாம்பழங்களை வாங்கிய பின் இன்னும் ஒரு மாம்பழத்தை வாங்குவதற்கு என்னிடம் குறைவாக இருக்கும் பணம் எவ்வளவு? ...........................................................

(20) 


இவ்வுருவின் 0.9 ஐ நிழற்றுவதற்கு இன்னும் நிழற்றப்பட வேண்டிய சிறிய சதுரங்களின் எண்ணிக்கை யாது? ...........................................................

(21) XVI + IV - XII இன் பெறுமானத்தை உரோம எண்குறிகளில் எழுதுக. ..............................


(22) 

(i) இக்கார்ட்போர்ட் அட்டையைப் புள்ளிக்கோடுகளின் வழியே மடித்து ஒட்டுவதன் மூலம் அமைத்துக்கொள்ளக்கூடிய திண்மத்தின் பெயரை எழுதுக. ..............................

(ii) அமைத்துக்கொள்ளப்பட்ட திண்மத்தின் முகங்களினதும் உச்சிகளினதும் எண்ணிக்கைகளின் கூட்டுத்தொகை யாது? ..............................

(23) 

இவ்வுருவில் உள்ள சமச்சீர்க் கோடுகளின் எண்ணிக்கை யாது? ..............................

(24) 


பாடசாலையொன்றில் 5A, 5B ஆகிய வகுப்புக்களிலுள்ள ஆண் பிள்ளைகளினதும், பெண் பிள்ளைகளினதும் எண்ணிக்கைகளை அருகிலுள்ள வரைபு காட்டுகிறது.

**— ஆண் பிள்ளைகள்** **— பெண் பிள்ளைகள்**


இத்தகவல்களுக்கேற்ப,

(i) இரண்டு வகுப்புக்களிலும் உள்ள பெண் பிள்ளைகளின் எண்ணிக்கை யாது? ..............

(ii) 5A வகுப்பை விட 5B வகுப்பில் அதிகமாக உள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை யாது? ..............................

kalvi.lk

சுட்டெண்:-..............................................

(25) 

இவ்வுருவில் $\frac{1}{4}$ ஐ நிழற்றிக் காட்டுக.

(26) மூன்று நண்பர்கள் தம்மிடமுள்ள பணத்தைச் சமனாக இட்டு ஒன்று ரூபாய் 60.00 வீதம் 4 அப்பிள் பழங்களை வாங்கினார்கள். அதன்படி, ஒவ்வொரு நண்பனும் இட்ட பணம் எவ்வளவு? ..................................................

(27) $18l\,294ml$ நிறப் பூச்சை 3 பாத்திரங்களில் சமனாக இடும்போது ஒரு பாத்திரத்தில் அடங்கும் நிறப் பூச்சு எவ்வளவு? ..................................................


(28) கீழே உள்ள அட்டவணை இலங்கையில் உள்ள நகரங்களுக்கிடையிலான தூரங்களைக் கிலோமீற்றர்களில் காட்டுகின்றது. அதன்படி, பின்வரும் வினாக்களுக்குரிய விடைகளைப் புள்ளிக்கோடுகளின் மீது எழுதுக.

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | அநுராதபுரம் |
| | | | கண்டி | 138 |
| | | யாழ்ப்பாணம் | 320 | 195 |
| | காலி | 512 | 232 | 322 |
| கொழும்பு | 126 | 396 | 116 | 206 |

(i) மிகக் கூடிய தூரத்திலுள்ள இரு நகரங்களும் எவை? ..................

(ii) கொழும்பில் இருந்து அநுராதபுரத்திற்கு உள்ள தூரம் யாது?.........

(iii) ஆஸிம் கொழும்பில் இருந்து கண்டிக்குச் சென்று, அங்கிருந்து அநுராதபுரத்திற்குச் சென்றான். அதன்படி, அவன் பயணித்த மொத்தத் தூரம் யாது? ..................................

(29) 



உரு A, உரு B ஆகியவற்றினால் கனவுரு ஒன்றின் முன்பக்கத் தோற்றத்தினதும் திட்டத்தினதும் நீளம், அகலம் காட்டப்படுகின்றன. அதன்படி, இக்கனவுருவின் பக்கத் தோற்றத்தின் நீளம், அகலம் என்பவற்றை எழுதுக.

நீளம் :- .......................................... அகலம் :- ..........................................

*** இலக்கம் (30) தொடக்கம் (59) வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய விடையைத் தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(30) இரண்டு தடிகளைப் பயன்படுத்தி விளையாடப்படும் கிராமிய விளையாட்டு,
(1) கிட்டிப்புள் (2) தாயம் போடுதல் (3) பல்லாங்குழி

(31) மிகக் கூடிய வேகத்தில் பயணிப்பது,
(1) காற்று (2) ஒலி (3) ஒளி

(32) 

இம்முறையில் யானைக் குளிர்பான போத்தல்களின் மூடிகளைப் பயன்படுத்தி வீட்டில் அமைத்துக்கொள்ளக்கூடிய சங்கீத உபகரணம்,
(1) ரபான் (2) சல்லாரி (3) கைத்தாளம்

(33) தொற்று நோய் ஒன்று பிரதேசம் முழுவதும் பரவும்போது முதலில் நாம் அறிவிக்க வேண்டியவர்,
(1) பொது சுகாதாரப் பரிசோதகருக்கு (2) பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு (3) கிராம சேவகருக்கு

(34) தண்டில் காய்கள் காய்க்கும் தாவர வகைகளைக் கொண்ட விடை,
(1) ரம்புட்டான், கொய்யா (2) அத்திக்காய், பிலிங் (3) மாதுளை, தோடை

(35) எண்ணெய் பெறப் பயன்படும் வித்துக்கள் அல்லாதது,
(1) ஆமணக்கு, வேம்பு (2) கடுகு, சூரியகாந்தி (3) கோப்பி, கொத்தமல்லி

(36) வேர்த்தண்டு கிழங்கு மூலம் இனப்பெருக்கம் செய்யும் தாவரங்கள்,
(1) இஞ்சி, மஞ்சள் (2) கங்குன், வற்றாளை (3) மரவள்ளி, கரட்

(37) வாத்தின் உருவைத் தெரிவு செய்க,
(1)  (2)  (3) 

(38) இரண்டு மூல வர்ணங்களைக் கலப்பதன் மூலம் அமைத்துக்கொள்ள முடியாத வர்ணம்,
(1) பச்சை (2) ஊதா (3) கபிலம்

(39) தேசியக் கொடியின் நீளம், அகலத்தைப்போல,
(1) இரு மடங்காகும். (2) மூன்று மடங்காகும். (3) நான்கு மடங்காகும்.

(40) வேர்களில் உணவை சேமித்து வைத்துள்ள தாவரங்கள் அல்லாதது,
(1) கரட், பீட்ரூட் (2) வற்றாளை, மரவள்ளி (3) லீக்ஸ், கரும்பு

(41) "க்ரெகரி ஏரி" அமைந்துள்ளது,
(1) அநுராதபுரத்தில் (2) நுவரெலியாவில் (3) பொலன்னறுவையில்

(42) தோலினால் உடலுக்குத் தேவையான வளியைப் பெற்றுக்கொள்ளும் பிராணி,
(1) மண்புழு (2) மீன் (3) பல்லி

kalvi.lk

(43) தனது கொடுக்கால் எதிரியைத் தாக்கும் பிராணிகளைக் கொண்ட விடை,
(1) வீட்டு ஈ, நுளம்பு (2) வெட்டுக்கிளி, கறையான் (3) குளவி, தேனீ

(44) தவிடு நீக்காத அரிசியில் உள்ள விற்றமின்,
(1) A (2) B (3) C

(45) யானைகள் சரணாலயம் அமைந்துள்ள இடம்,
(1) பின்னவல (2) குமண (3) யால

(46) செவியில் பிடித்துத் தூக்கப்படும் பிராணி,
(1) ஆடு (2) பூனை (3) முயல்

(47) இம்மாகாணத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களும் கரையோர மாவட்டங்கள் ஆகும். இம்மாகாணம்,
(1) வடமேல் மாகாணம் (2) தென் மாகாணம் (3) வட மாகாணம்


(48) இலங்கையில் முதன் முதலில் அமைக்கப்பட்ட அதிவேகப் பாதை,
(1) தெற்கு அதிவேகப் பாதை (2) கொழும்பு - கட்டுநாயக்க அதிவேகப் பாதை
(3) மீரிகம - குருணாகல அதிவேகப் பாதை

(49) இரசாயனங்கள் கலக்கப்பட்ட உணவுகளை அதிகம் உண்பதால் ஏற்படக்கூடிய நோய்
(1) நீரிழிவு (2) உயர் குருதியமுக்கம் (3) புற்றுநோய்

(50) நஞ்சுப் பொருட்கள் அடங்கிய போத்தல்களில் காணக்கிடைக்கும் குறியீடு,
(1) 
(2) 
(3) 

(51) சூரிய கிரகணம் நிகழும்போது,
(1) சூரியனின் ஒரு பகுதி அல்லது முழுவதும் தென்படாது. (2) சந்திரனின் ஒரு பகுதி அல்லது முழுவதும் தென்படாது.
(3) புவியின் ஒரு பகுதி அல்லது முழுவதும் தென்படாது.

(52) பெறுமதி வாய்ந்த மரப்பலகைகளைப் பெற்றுக்கொள்வதற்கும், பழங்களைப் பெற்றுக்கொள்வதற்கும், அதேபோல உணவாக சமைப்பதற்கான காய்களைப் பெற்றுக்கொள்வதற்கும் பயன்படுத்தப்படும் தாவரம்,
(1) ஈரப்பலா (2) பலா (3) மா

(53) "கார்த்திகை" எனும் உடுக்கோலத்தைக் காட்டும் உரு,
(1) 
(2) 
(3) 

(54) பின்வரும் உடுக்கோலங்களில் மிகவும் கூடிய எண்ணிக்கையான உடுக்கள் அடங்கும் உடுக்கோலம்,
(1) பெருங்கரடி (2) வேட்டைக்காரன் (3) தென்சிலுவை

(55) நீருக்கு இருக்கக்கூடிய ஓர் இயல்பாக அமையாதது,
(1) எல்லாப் பொருட்களும் நீரில் கரையும். (2) குளிர்த்தும்போது பனிக்கட்டியாக மாறுதல்.
(3) வெப்பமாக்கும்போது நீராவி வெளியேறல்.

(56) "எனது உள அமைதியை எனது வீட்டாருக்கும் என்னால் பகிர்ந்தளிக்க முடியும். ஒரு நல்ல பிள்ளையாக இருக்க என்னால் முடியும். எல்லாவற்றிலும் என்னால் வெற்றி பெற முடியும். முழு உலகையும் என்னால் வெற்றி கொள்ள முடியும்." இந்த எண்ணம் மனதை ஒரு நிலைப்படுத்தும் செயற்பாட்டின் எத்தனையாவது படிமுறைக்கு உரியதாகும்,
(1) நான்காவது (2) இரண்டாவது (3) ஐந்தாவது

(57) இலங்கையில் விலங்குகளை வளர்த்துப் பால் உற்பத்தி செய்யப்படும் தொழிற்சாலை இருக்கும் பிரதேசம்,
(1) பின்னவல (2) அம்பேவெல (3) வில்பத்து

(58) கஞ்சி தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் இலை வகையாக அமையாதது,
(1) முடக்கொத்தான் (2) சாத்தாவாரி (3) கோப்பை இலை

(59) இந்நாட்டினுள்ளே பதிவுத் தபால் மூலம் கடிதத்தை அனுப்புவதற்கு குறைந்தபட்சம் எவ்வளவு பெறுமானமுள்ள முத்திரை தேவைப்படும்?
(1) ரூபாய் 110.00 (2) ரூபாய் 55.00 (3) ரூபாய் 40.00


**(60) "நீர் எமக்கு மிகவும் பெறுமதியான வளமாகும்" எனும் தலைப்பின் கீழ் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்பும், எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)**

(1) ..........................................................................................

(2) ..........................................................................................

kalvi.lk

(3) ..........................................................................................




## தரம் 5

# புலமைத் தேடல்

யாழ்ப்பாணம், வடமராட்சி செ.நிஷாந்தன், செ.விமல் ஆசிரியர்கள் எழுதிய புலமைத் தேடல் புலமைப்பரிசில் எதிர்பார்க்கை மாதிரி வினாத்தாள்கள்

📮 நாடு பூராகவும் CASH ON DELIVERY
( தபால்காரரிடம் விலை 1250/- செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும் )

**ORDER NOW**

**HOME DELIVERY**

075 287 1457

BUY BOOKS

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page